**STARTING TIME 12.26 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 11/2025**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 20.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மகேந்திரன் Father's Name : ஏழுமலை

Address : கதவு எண்.38, Sri ராம்நகர், கொண்டபாளையம் கிராமம், சோளிங்கர் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 49

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு சொந்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால், தெரியாது. எனது தாய்வழி தாத்தாவின் பெயர் நாராயணசாமி ரெட்டியார் என்றால், சரிதான். இவ்வழக்கின் வாதி எனது தாய் மாமா என்றால், சரிதான். இவ்வழக்கு சொத்து எனது தாத்தா சம்பாதித்ததா அல்லது அவரது பூர்வீக சொத்தா என்றால், எனது தாத்தாவே சம்பாதித்த சொத்தாகும். என் தாத்தா தாவா சொத்தை யாரிடமிருந்து வாங்கினார் என்றால், அது பற்றி தெரியவில்லை. இந்த விவரம் எனது அம்மாவிற்கு தெரியுமா என்றால், தெரியும்.

2. எனது குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள் பற்றி என்னைவிட எனது அம்மாவிற்கு நன்றாக தெரியும் என்றால், சரிதான். எனது அம்மாவிற்கு விபத்து ஏற்பட்டு தலையில் அடிப்பட்டு நினைவாற்றல் குறைந்திருப்பதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதுபோல் சொல்வது உண்மை என்றால், அதற்கான மருத்துவ ஆவணங்கள் இருக்கும் என்றும், அதுபோன்று எனது தாயாருக்கு விபத்து ஏற்பட்டு காயம் எதுவும் ஏற்படாததால் தான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

3. தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். தாவா சொத்திற்காக செக்குபந்தி தெரியுமா என்றால், தெரியாது. எனது வாக்குமூலத்தில் 43 வருடங்களுக்கு முன்பு நடந்ததாக சொல்லியுள்ள குடும்ப ஏற்பாட்டில் யார், யார் கலந்துக் கொண்டது என்றால், எனது பாட்டி, மாமாவான வாதி மற்றும் எனது அம்மா ஆகியோர் கலந்துக் கொண்டனர். ஊர் பெரியவர்கள் யாரும் கலந்துக் கொண்டார்களா என்றால், இல்லை. மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது அம்மா சொல்லி தான் தெரியும் என்றால், சரிதான்.

4. வாதி அனுபவித்து வருவதாக சொல்லும் வழக்கு சொத்து கிணற்று பாசனமா அல்லது ஏரி பாசனமா என்றால், கிணற்று பாசனம் தான். அந்த கிணற்றில் எனது அம்மாவிற்கு ஏற்கனவே பங்கு இருந்ததா என்றால், இருந்தது. வாதி தாவா சொத்தை கிணற்று பாசனம் மூலம் அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றும், வாதியே அவரது வாக்குமூலத்தில் போர் போட்டு அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால், ஏற்கனவே கிணற்று பாசனம் இருந்தது, தற்போது போர் பாசனம் உள்ளது.

5. அந்த கிணறு அல்லது போர்வெல் இருக்கும் நிலத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது. எனக்கு வழக்கு பற்றிய எதுவும் தெரியாமல், எனது தாய் மாமாவான வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது அம்மா நல்ல உடல் நலத்துடன், ஞாபக சக்தியுடன் உள்ளார் என்றும், அவருக்கு விபத்து ஏற்பட்டு அடிப்பட்டுவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**Ending Time: 12.44 P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.20 14:13:42 +0530